# பொதுக்காலம் 21ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைவன் தரும் மீட்பினை பெற்றுக்கொள்ள இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள் என்று நம்மை அழைக்கிறது பொதுக் காலம் 21ம் ஞாயிறு. இறைவன் தரும் மீட்பு என்பது ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு மட்டும் அன்று; அவரை நாடித் தேடும் அனைவருக்கும், அவர் வழி நாடும் யாவருக்கும் கிடைக்கப் பெறுவது ஆகும். மீட்பு என்பது இறைவனின் கொடையாய் இருப்பினும் அவற்றை நிலையாய், நிறைவாய் நம்முள் நிறுத்திக்கொள்ள இறையச்சத்தோடு சில செயல்கள் நம்மில் எழவேண்டும்.

இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு புது வாழ்வை வாக்களிக்கும் இறைவன் அவரது மாட்சியை அறியாத பிற இனத்தவருக்கும் வாழ்வளிக்கிறார் என்பதை இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கின்றார். இன்றைய சூழலில் இம்மண்ணின் மக்களே பிற இனத்தாராய் ஒதுக்கப்படுகின்றோம்.

இன்றைய நற்செய்தியில், இடுக்கமான வாயில் வழியே நுழைய அழைக்கிறார் இயேசு. இடுக்கமான வாயில் வழியே நுழைவது கடினம்; ஆனால் பயணிப்பது எளிது. ஏனெனில் அது இறைவனின் பாதை. ஆபத்துக்கள் குறைவு. அகலமான பாதையில் விபத்துகளும் ஆபத்துகளும் அதிகம். ஆடம்பரங்களை மட்டும் வெளிப்படுத்தும் அகலமான வாயிலை புறந்தள்ளி, இடுக்கமான வாயிலில் தன்னையே ஒடுக்கிக் கொண்டு உண்மை இறைவனை துணை கொண்டு நுழைவோம். இப்பலியில் பங்கேற்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. குருக்களாகவும் லேவியராகவும் நியமிப்பவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்த நீர் குருக்களாக நியமித்த திரு அவைப் பணியாளர்களை ஆசீர்வதித்து, நிலையான நிறைவாழ்விற்கு மக்களை வழிநடத்த அருள் தர வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

2. நேர்மையான பாதையில் நடந்து செல்லுங்கள் என்றவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் நேர்மையான வழியில் நடக்கவும், மக்களை வருத்தாத திட்டங்களை செயல்படுத்தவும் இயற்கையையும் விவசாயத்தையும் சீர்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நல்லறிவு தரவேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

3. இடுக்கமான வாயில் வழியே நுழைய கற்றுக் கொள்ளுங்கள் என்றவரே!

உம் மீட்பைப் பெற்றுக் கொள்ள தடைகளாய் இருக்கும் எங்கள் சோம்பல், கவனக்குறைவு, இவ்வுலகப் பற்றுகள் போன்றவற்றை எம்மிலிருந்து அகற்றி, உம் பாதையில் தெளிவானம் திடமான மனதுடன் நடக்க வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

4. நலன்களால் எம்மை நிரப்புபவரே எம் இறைவா!

எங்களுக்குத் தேவையான மழை பொழிந்து விவசாயம் சிறக்கவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், படிக்கும் மாணவர்கள் கல்வி, ஞானம், ஒழுக்கத்தில் சிறக்கவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமது அருளால் பெற்று நிறைவடையவும் வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com